06

27 SEP 1930

நவமணி.

உள்நாடு ரூ 1

வெளிநாடு ரூ 1½

ஆசிரியன் சி. ரா. ம இராமநாதன்

NAVAMANI.

(*A High Class Tamil Monthly*)

PALLATUR. RAMNAD DT.

Vol. I. பிரமோதூத, ஆடி ஆவணி No 7, 8.

பொருளடக்கம்.

எண்.	விஷயம்.	பக்கம்.
	மாலை 1—மணி 7.	
1.	கடவுள் வணக்கம்.	145.
2.	ஸ்தலமஞ்சரி:—ஸ்ரீமதி பண்டிதை அசலாம்பிகை அம்மாளவர்கள்.	146.
3.	ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு:—(தலையங்கம்) பத்திராதிபர்.	147.
4.	மணியொளி:—(குறிப்பு.) பத்திராதிபர்.	150.
5,	உடலோம்பல்:—திருவாளர், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களின் சொற்பொழிவு.	153.
6.	மனோவசியத்தின் பொருளும், பயனும்:— திரு. பி. ஸ்ரீ. அவர்கள்.	159.
	மாலை 1—மணி 8.	
1.	கடவுள் வணக்கம்.	161.
2.	ஸ்தலமஞ்சரி:—ஸ்ரீமதி பண்டிதை அசலாம்பிகை அம்மாளவர்கள்.	163.
3.	இந்தியக் கைத்தொழில்:—(தலையங்கம்) பத்திராதிபர்	165.
4.	மணியொளி:—(குறிப்பு) பத்திராதிபர்.	169.
5.	சிறுவர்களின் கல்வி:—மொழிபெயர்ப்பு.	173.
6.	ஆந்திர நாடு; லேபாக்ஷி ஸ்தலம்:—கோவை திரு. சி. கு. நா. அவர்கள்.	178.
7.	மனோவசியத்தின் பொருளும், பயனும்:-(முன் தொடர்ச்சி) திரு. பி. ஸ்ரீ. அவர்கள்.	181
8.	கனகவல்லி அல்லது கள்வர் கவர்ந்த கன்னிகை:— கோவை. திரு. சி. கு. நாராயணஸாமி முதலியார் அவர்கள்.	184.
9.	தமிழ்நாட்டுப் பலசாலிகள் மகாநாடு—காரியதரிசி.	188.
10.	வனிதாரத்னம் அல்லது மாசற்ற மாமணி:—திரு. ச. தா. பாலையா பிள்ளை அவர்கள் குன்னூர்.	189.

கடவுள் வணக்கம்.

தனனதன தனனதன தந்தனந் தந்தனந்
தனனதன தனனதன தந்தனந் தந்தனந்
தனனதன தனனதன தந்தனந் தந்தனந் தந்ததான.

கொடி யனைய இடைதுவள அங்கமும் பொங்கஅங்
குமுதஅமு திதழ்பருகி இன்புறுஞ் சங்கையன்
குலவியணி முகிலளக முஞ்சரிந் தன்பினின் பண்புலாவக்
கொடியவிரல் நகதுதிசெய் புண்படுஞ் சஞ்சலன்
குறுகியவ ருடனினிது சம்ப்ரமங் கொண்டுளங்
குரலழிய அவசமுறு குங்குணன் கொங்கவிழ்ந்
[தொன்றுபாய்மேல்
விடமனைய விழிமகளிர் கொங்கையின் பன்புறும்
வினையனியில் பரவுமுயிர் வெந்தழிந் தங்கமும்
மிதமொழிய அறிவில்நெறி பண்பிலண் டுஞ்சகன்
[செஞ்செநீடும்
வெருகனக ஒளிகுலவும் அந்தமன் செந்திலென்
றவிழஉள முருகிவரு மன்பிலன் தந்திலன்
விரவுமிரு சிறுகமல பங்கயந் தந்துகந் தன்புறுதோ
படமிகுல மரவினுட லங்கமும் பங்கிடந்
துதறுமொரு கலபிமிசை வந்தெழுந் தண்டர்தம்
பகையசுர ரனைவருடல் சந்துசந் துங்கதஞ் சிந்தும்வேலா
படிபவரு மிமையவரும் நின்றிறைஞ் செண்குணன்
பழையஇறை உருவமிலி அன்பர்பங் கன்பெரும்
பருவரல்செய் புரமெரிய விண்டிடுஞ் செங்கணன்
[கங்கைமான்வாழ்
சடிலமிசை அழகுபுனை கொன்றையும் பண்புறும்
தருணமதி யினமுறைசெய் துண்டமுஞ் செங்கையொண்
சகலபுவ னமுமொழிக தங்குறங் கங்கியும் பொங்கிநீடும்
சடமருவு விடையரவர் துங்கஅம் பங்கினின்
றுலகுதரு கவுரியுமை கொங்கைதந் தன்புறும்
தமிழ்விரக உயர்பரம சங்கரன் கும்பிடுந் தம்பிரானே.

ஸ்தலமஞ்சரி.

ஸ்ரீமதி. பண்டிதை அசலாம்பிகை அம்மா ளவர்கள்.

132-வது பக்கத் தொடர்ச்சி.

அன்பு பூண்டவர்க் கேயருள்புரிகுவை யெனயாம்
முன்பு பூண்டிருக் தோமுள முதல்வநீ யகன்றே
வன்பு பூண்டமண் மதம்புகு மவரையும் வலிந்தே
இன்பு கூர்ந்திட வாண்டரு ளியல்புணர்ந் தவர்தேன். 46

திருக்கோவலூர்.

மாதிரையிற் பெண்ணை மணிநீலங் கொண்டொதுக்கும்
தீதறுசீர்க் கோவற் றிருப்பதிசேர்ந்—தாதிரையில்
அம்பலவர்க் காட்டு மபிடேக நேர்தெரிசித்
தெம்பிறவி மாய்த்தே னிவண். 47

பீடார் தமிழறியும் பெண்ணைநதிப் பாங்கரில்வாழ்
பாடாருங் கோவிற் பதியினிடைத்—தேடா
அரிபிரமர் காணு வடியா திரையிற்
றெரி சனைசெய் தற்றேன் றெருள். 48

அம்பர்மாகாளம்.

நெக்கோல நினக்கோல மென்றமரர் குலங்கூவி நெஞ்சம் பஞ்சாய்ப்
புக்கோல மிடக்காலங் குடித்தருளும் புண்ணியநீ புலையனுகும்
இக்கோல மெழிற்கோல மெனக்கொளவுந் திருவுளத்திலிசைந்
தாயென்னே
அக்கோல மடிக்கோலிக் காண்பதற்கு மறியாத
அருட்கோலத்தாய். 49

தன்னடியார் தனினுமவர் தமக்கடியார் பாலென்றுந்
தாழாவன்பு
முன்னுடையீ ரெனுமுண்மை விளக்கிடவே யாரூரர்
முதமே கூற
மின்னிடையா ரொடும்பள்ளாய் மேவியநீரவர்க்கடிமை
மேவினர்க் காய்
புன்னடையார் புலையுருவம் புனைந்தளித்தீர்
போதுமெனப் புலங்கொண் டேனே. 50

(தொடரும்.)

OFFICE OF THE REGISTRAR
No.
27 SEP 1930
MA

உ

எல்லாம் தெய்வச்செயல்.

'நவமணி;'

பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே. [பாரதியார்

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. [திருவள்ளுவர்]

மாலை 1. } பள்ளத்தூர். பிரமோதூத, ஆடி. { மணி 7.

ஒன்றுபட்டா லுண்டு வாழ்வு.

ஒன்றுபட்டா லுண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை நீங்கிலனை வர்க்குந் தாழ்வு; நன்றிது தேர்ந்திடல் வேண்டும்; இந்த ஞானம் வந்தாற் பின் நமக்கேது வேண்டும். என்றார் கவியரசர் ஸ்ரீசுப்பிரமணிய பாரதியார். ஆனால் நமது நாடோ ஒற்றுமையின்மையால் எவ்வளவு பலஹீனப்பட்டிருந்த தென்பதை இன்று மிகுந்த ஒற்றுமையுடன் நடைபெறும் சுதந்தரப்போரைக் கண்டார் நன்கறிவர். நம் காந்திஜீ சொல்லிப்போன மிகுந்த அர்த்த புஷ்டியுள்ள சிறு வார்த்தைகளைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டு பிடிவாதமாகவும் ஒற்றுமையோடும் சர்வசங்கப் பரித்தி தியாகம் செய்வோம் என்ற நிச்சயத்தோடும் நாம் வேலை செய்ததனாலல்லவோ சர்வ வல்லமையுள்ள தென்றும் எவருக்கும் பயப்படாததென்றும் சொல்லிக்கொள்ளும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டும் ஓர்படி இறங்கி இச் சமாதானம்பேச இடங் கொடுத்துள்ளனர். நம் முன்னோர் யாவரும் அதனால் தான் எதற்கும் எங்கும் ஒற்றுமை தான் பலம்

ஒற்றுமையே ஜயந் தரும் என வலியுறுத்திச் சென்றனர். அதைக் கடைப்பிடித்து ஒற்றுமையுடன் இந்தியாவில் பல்வேறு சாதனை கள் பெறப்பட்டபோதிலும் அதில் நமது காலத்திலேயே ஒற்றுமை முக்கியமாக விளங்கியதால் முதலில் நாகபுரி கொடித்த கராறும் வைக்கம் சத்தியாக்கிரஹமும் பர்டோலி வரிகொடா இயக்கமும் இன்னும் அது போன்றவைகளும் வெற்றியுடனே முடிவடைந்தன. இப்பொழுது நடைபெறும் சுதந்தரப்போருக் கும் எவ்வளவோ எதிர்ப்பிருந்தபோதினும் பல்வேறு அபிப்பிராய பேதமுள்ளவர்களும் இதில் ஒன்றுபட்டபடியால் எத்தனை வகை யான அடக்குமுறைச் சட்டங்கள் தோன்றினும் அவையாவை யும் விட ஒற்றுமைக் கிளர்ச்சி பலன் தந்துவிடவே சமாதான முயற்சிமேலெழுந்தது. இப்போதைய சுதந்தரக் கிளர்ச்சியால் இந்தியாவிற்குப் பல வழியிலும் நஷ்டமே யானபோதிலும் பின் கிடைக்கக்கூடிய நற்சுகத்தை யுத்தேசித்து இந்திய மஹாஜனங் கள் தங்கள் உயிரையுந் தியாகஞ்செய்து அச்சுகபலனை அடைவ தென்று ஒன்றுபட்டனர். அந்த நிலையிலும் நமக்கு நமது சுகம் ஒன்றுதான் தேவையே தவிர ஏனையோரின் பகையோ அன்றி ஏனையோருக்கு சிரமமோ நாம் அளிக்க விரும்பவில்லை என்பதற்கு அடையாளமாக ராஜிப் பேச்சுமேலெழுந்தவுடன் யாவரும் எல் லாத் தலைவர்களும் கைதிகளாக ஜயிலிலிருந்தபோதிலும் அவர் களை வெளியில் விடாமல் ஜயிலிலேயேவைத்து அந்த ராஜியைச் செய்ய எண்ணியபோதிலும் அதையும் கௌரவமாக எண்ணி ஜயிலிலேயே அப்பேச்சு நடந்துவருகிறது. கவர்ன்மெண்டாரும் தலைவர்களும் இதில் தங்கள் பிடிவாதத்தையோ அல்லது பலத் தையோ பொருட்படுத்தாமல் கொஞ்சம் விட்டுக்கொடுத்து இரு வரும் சமரசநோக்கிலேயே கண்ணுங் கருத்துமாக விருப்பார்களே யானால் ராஜி நிச்சயம் எப்பொழுதும் சமரசம் கண்ணியமாகவே இருக்கவேண்டும். அப்பொழுது தான் அது நீடிக்கும். ராஜிக்கு மத்தியிலிருந்து முயற்சிப்பவர்கள் மீண்டும் போராட்டத்திற்கு இடமில்லாமல் கண்ணியமானவழியில் ராஜியைச் செய்துவைக்க இறைவன் நல்ல யோஜனைகளையும் தாராள நோக்கத்தையும் அவர் களுக்கு அளிக்கப் பிரார்த்திக்கிறோம்.

இதன் மத்தியில் நம் இந்தியாவிற்கு சாபத்தீடு போன்றுள்ள ஹிந்து முஸ்லீம் வேற்றுமை சிறிதும் தலைகாட்டாமல் செய்ய வேண்டுமென்று எவ்வளவோ முயற்சித்தும் அது சில சில சமயங் களில் மீண்டும் மீண்டும் வேற்றுமைக்கு இடங்கொடுத்துவிடுவது மிகவும் துக்ககரமான விஷயம். இதில் மிகுந்த இடம் பெற்றிருந்த வங்காளங்கூட சமீபத்தில் தானாகவே ஒற்றுமை பெற்றுவருகிற தென்பதற்கு சமீபத்தில் கல்கத்தா கார்ப்பொரேஷனில் அவர் களுக்குள் ஓர் சமாசஞ் செய்து கார்ப்பொரேஷன் மேயராக ஓர் ஹிந்து இருந்தால் டிப்டி மேயராக ஓர் முஸ்லீமும் ஓர் முஸ்லீம் மேயராகவிருந்தால் டிப்டி மேயராக ஹிந்துவும் இருப்பது என் பதுபோன்ற முடிவுக்கு வந்து சமாசஞ்செய்து கொண்டது யாவரையும் சந்தோஷப்படுத்தி இருக்லாம். இவ்வாறே நமக்குள் நூதனமான வித்தியாசத்தை உண்டு செய்பவரை நம்மிடையே இருந்து பிரித்து நமக்குள் உள்ள சிறுசிறு சச்சரவுகளையும் நாமாகவே சமாசநோக்குடன் விட்டுக்கொடுத்து ஓர் ஒப்பந்தஞ் செய்துகொண்டு போவதுதான் நலமே யொழிய அற்பக் காரியங் களுக் கெல்லாம் வீண் கலகஞ் செய்தும் சிறு தகரார்களைப் பெரிதாக்கியும் நாம் வாழ்வது கொஞ்சமும் நன்றன்று. சமீபத்தில் டில்லி முதலான இடங்களில் மௌலானா ஷௌகத்தாலி போன்ற பெரிய முஸ்லீம் கனவான்கள் கூட இத் தேசிய இயக்கத்திற்கு விரோதமாக முஸ்லீம்கள் இருக்கவேண்டுமெனச் சொன்னது மிகவும் துரதிஷ்ட விஷயம். ஆயினும் டாக்டர் அன்சாரி, மௌ லானா அப்துல் கலாம் அஸாத், மௌலானா ஸையத் மஹமத், அப்பாஸ் தயாப்ஜீ போன்ற முஸ்லீம் கனவான்கள் பலர் அதை எதிர்ப்பதற் கறிகுறியாக நேராகத் தேசிய இயக்கத்தில் கலந்து கொண்டார்கள். இதே போன்று இப்போரில் ஜயில்சென்றவர். களின் கணக்கை எடுத்துப் பார்த்தால் 3-ல் ஒரு பங்கினர் முஸ் லீம் அன்பர்கள் என்றே சொல்லவேண்டும். இதுபோன்ற சில சந்தர்ப்பங்களில் சில விஷமப் பிரசாரகர்களின் வார்த்தையைக் கேட்டு ஒருவருக் கொருவர் தூர் எண்ணங்கொள்ளாமல் விசால நோக்குடன் நடந்துகொள்ளவேண்டியது இரு சமூக வாதிகளும் செய்யவேண்டிய விஷயம். இச்சமயத்தில் இந்தியாவிலுள்ள ஆங்கிலோ இந்தியர்களும் உண்மையான கிருஸ்தவ அன்பர்களும்

பார்சி, சீக்கியர் போன்ற ஏனைய மதத்தினர்களுங்கூட ஒற்றுமையைக் கைக்கொண்டது மிகுதியும் பாராட்டத் தகுந்தது. இதே போன்று எப்போதும் இந்தியர் யாவரும் ஒன்றுசேர்ந்து ஒற்றுமையாக வாழ்ந்தால் ஆங்காங்குள்ள சின்னஞ்சிறு வேற்றுமைகளும் தானாகவே மறைந்துபோய்விடும். எங்கும் ஒற்றுமையே நிலவும் அதனால் ஜயமே ஏற்படும்.

மணியொளி.

இரண்டாம் பாகம்.

சைமன்கமிஷன் யாதாஸ்தின் இரண்டாம்பாகமும் வெளிவந்துவிட்டது. நாம் சென்ற மணியில் எழுதியபடி இதில் முடிவுகள் கூறப்பட்டுள்ளபோதிலும் அது பெயரளவில் வைத்துக் கொள்ளவேண்டியதைத் தவிர வேறொன்றும் இந்தியர் எவரும் ஒப்புக்கொள்ளமுடியாதென்பதற்கு முதல் பாகம் வெளிவந்தபொழுது அதை வாங்குவதிலும் அதைப் படிப்பதிலும் உள்ள உற்சாகத்தில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட இதில் காட்டப்படவில்லை என்பதும் பலதிறப்பட்டவர்களும் இதைத் தாராளமாகக் கண்டித்தெழுதியிருப்பதும் அத்தாட்சியாக விளங்குகிறது. ஏராளமான பணச்செலவில் வந்த கமிஷனை முதலில் நியமிக்கும் பொழுதே சிறிது யோஜனைசெய்து சில இந்தியர்களையும் அதில் கலந்திருந்தால் இவ்வளவு மோசமான நிலைமைக்கு வராமல் இன்னும் கொஞ்சம் முற்போக்கு நிலைமையிலிருந்திருக்கும். மாண்டேக்கு செம்ஸ் போர்டு சீர்திருத்தம் போதாதென்று கிளர்ச்சி செய்யும் இந்தியர்கள் மத்தியில் அந்த சீர்திருத்தம் மிகுதிஎன்ற கொள்கையில் வெளிவந்துள்ள ரிப்போர்ட்டைப்பார்த்து அழுவதா, சிறிப்பதா வென்பது நமக்கு விளங்கவில்லை.

படேல் விசாரணை யாதாஸ்து.

பெஷாவாரில் படேல் உள்ளிட்ட விசாரணைக் கமிட்டியார் செய்த விசாரணை ரிப்போர்ட்டை வெளியிடுவதில் மிகுந்த தாமதம்காட்டப்படுகிறது. அதற்கு இப்பொழுது அமுலிலுள்ள

அவசர அச்சுச்சட்டமே காரணம்போல் தோன்றுகிறது. உள்ளதை உள்ளபடி விஜாரித்து ரிப்போர்ட்டுசெய்ய நியமிக்கப்பட்ட கமிட்டியார் தங்கள் முடிவை வெளியிடக்கூட முடியவில்லை. இதை வெளியிட முன்னர் ஒப்புக்கொண்ட இந்தியன் டெயிலி மெயில் அச்சுக்கூட சொந்தக்காரர் தங்கள் வக்கீல்களின் விருப்பத்திற்கிணங்க அந்தரிப்போர்ட்டில்பலபாகங்களை எடுத்துவிடவேண்டுமென்ற யோஜனையை படேல்கமிட்டியாரிடம் அறிவிக்கவே தலைவர் படேல் அதைஎடுப்பதை ஒப்புக்கொள்ள வில்லை யாகையால் அவ் அச்சுக்கூடத்தார் அதைவெளியிட மறுத்துவிட்டனரென அறிகிறோம். அவர்கள்மறுக்கவும் அதைமற்றொருவர் எற்று வெளியிடுவது கொஞ்சம் சம்சிரமந் தானே. இக்காரணத்தால் அந்த ரிப்போர்ட் இன்னும் வெளிவராதது மிகவும் வருந்தத்தக்க விஷயம்.

சாரதா மசோதா.

ஸ்ரீ ஹரிவிலாஸ சாரதாவினால் இந்தியா சட்டசபையில் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டு அமுலிலுள்ள சாரதாமசோதாவென்ற சம்மதவயது மசோதா அமுலிலுள்ளதை சிறிதுநாளைக்கு முன் ஓர் முஸ்லீம் கனவான் மீறிப் பஹிரங்கமாக மணமுடித்தார். அது ஒரு மாஜிஸ்ட்ரேட்டின் முன் விஜாரணைக்குவரவே அவர் அவ்வழக்கில் அம்முஸ்லீம் கனவானைக் குற்றவாளியென முடிவு செய்து சட்டப்படி தண்டித்துவிட்டார். இதை அறிந்த இந்தியா கவர்ண்மெண்டார் உடனே தந்திசொல்லி அம்முஸ்லீம் கனவானை விடுவித்துவிட்டார்கள். ஓர் சட்டம் அமுலிலிருப்பதை நன்கறிந்து வேண்டுமென்றே மீறியபோதிலும் இச்சந்தர்ப்பத்தில் அதை நியாயமாகப்பார்த்தால் அக்கிளர்ச்சியும் சேர்ந்துகொண்டு தங்களுக்கு எதிர்ப்பு அதிகப்பட்டு விடுமென்ற காரணத்தால் இது அவ்வாறு நடத்தப்பட்டபோதிலும் மழுப்பிவிடப்பட்டுவிட்டது ஆனால் தேசீயவிஷயத்தில் இம்மாதிரி எவரும் சட்டத்தை மீறுவதாகச் சொன்னாலும்போதும். மீறுமலிருக்கும்பொழுதே பலர் தண்டனையடைந்திருக்கும் பொழுது மீறுவதாகச் சொன்னால் கேட்க்கவாவேண்டும்.

அமெரிக்கப் பத்திரிகை.

அமெரிக்காவில் 'யுனிட்டி' என்றொரு பத்திரிகை யுண்டு அது இந்தியாவில் தற்பொழுது சிறைசென்றுள்ளவர்களின்

குடும்ப சம்ரக்ஷணைக்கு ஒரு உதவிநிதி சேர்த்துவருகிறதாம். அதற்கு அமெரிக்கரில் பலரும் தாராளமாக உதவிவருகின்றனராம். அதை மஹாத்மாஜீக்கு அனுப்பி ஏழை இந்தியர்கள் தேசப்பற்றுதலால் சிறைசென்று அவர்கள் குடும்பம் சிரமப்பட்டால் அவர்களுக்கு உதவ ஏர்பாடு செய்யுமாம். அதைப்போலவே தொடர்ந்து அனுப்பவும் முயற்சிக்குமாம.

எல்லோரும் சென்றனர்.

மோட்டிலால் ஜீயுள்பட தேசியத்தலைவர்கள் யாவருஞ் சிறைசென்றனர். செட்டிமார்நாட்டிலும் தேசபக்தர் திருகூடசுந்தரனுர் ப. இராமஸாமி ஐயங்கார் பரமசிவம் போன்ருரும் சென்றனர். இவர்களை எல்லாம் சிறைப்படுத்திவிட்டால் இயக்கம் நின்றுவிடுமென்பது நோக்கமாகவிருக்கலாம். ஆயினும் இயக்கம் நின்றபாடில்லை அது மேன்மேலும் நடந்துகொண்டேவருகிறது. ஒருபுறம் ராஜிப்பேச்சைப்பேசிக்கொண்டிருப்பவர்கள் மற்ருெர்புரம் அடக்குமுறையை அதிகமாகக் கையாளுவதன் நோக்கம் விளங்கவில்லை, இதனுல் அந்த ராஜிக்கும் ஒரு பெருமையில்லை. எனவே, அடக்குமுறை பலன்தராதென்பதையுணர்ந்து சமரசமாகப் போவதையே பெரிதும் விரும்புவதே நலமென எண்ணுகிறேம்.

வியாபாரம் படுத்துவிட்டது.

இந்தியப்போரினுல் ஏற்பட்ட அந்நியத் துணி பஹிஷ்காரத்தில் வெளிநாடுகளில் விசேஷமாக இங்கிலாந்தில் எல்லாவியாரங்களும் சிறப்பாகஜவுளிவியாபாரமும் படுத்துவிட்டதென அவர்களும் ஒப்புக்கொள்ளுகின்றனர். இவ்வளவு குறுகிய காலத்தில் ஜவுளி பஹிஷ்காரம்செய்யப்பட்டதால் வியாபாரநெருக்கடி ஏற்பட்டு வேலையற்றவர்களின் தொகைபெருகி பல மில்களும்மூடவேண்டியதேற்பட்டுவிட்டதென்ருல் இத்தனை நாளும் இவை கவனிக்கப்படாததால் இந்தியர்களின் ரூபாய் எவ்வளவு நஷ்டமேற்பட்டிருக்கிறதென்பதை சிறிது சிந்தித்துப்பார்க்கவேண்டுகிறேம். ஒவ்வொரு அந்நியசாமான்களாலும் இப்படியே இந்தியா நஷ்டமடைந்துள்ளது. இனியேனும் இந்தியர் இந்தியத்தொழிலையே ஆதரிப்பாராக.

உடலோம்பல்.

திருவாளர். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களின் சொற்பொழிவு.

இளைஞர்கள் உடலோம்பல்மீது பெருங்கவலை செலுத்துதல்வேண்டும். இவ்வுலக இன்பத்தை நேரிய வழியில் நுகர்தற்பொருட்டே கடவுளால் அளிக்கப்பெற்ற உடைமை இவ்வுடல். இவ்வுடலை இளமையிலேயே வளம்படுத்திக் கொள்ளல்வேண்டும். இளமையில் உடலைக்காவாது கவலை ஈனமாய்க் கிடத்தல் பின்னை இவ்வுலக வாழ்விழந்து துன்புறுதற்குக் கால் கொள்வதாகும். உடல் வளம்பெறாத ஒருவன் எச்செல்வம் பெற்றிந்தாலென்னை? எப்பேறு பெற்றிருந்தாலென்னை?

இளமை.

இளமை எது? இன்பமா? இன்ப மகிழ்வா? இன்பக்கூர்தலா? என்னென்று சொல்வது? இளமை நெஞ்சைக் கவர்வதுபோல வேறே தேனுங் கவர்கிறதா? இளமையில்லையேல் உலகில் இன்பமேது? புல் பூடுகளிலும், செடிகொடிகளிலும், பறவை விலங்குகளிலும், மக்களிலும் இளமை யரும்பிக் கண்ணையும் கருத்தையுங் கவர்ந்து, இன்ப அமிழ்தால் அகவிருந்த நல்கிவருவதை எவரே அறியார்? உலகை இன்பத்தால் ஓம்பி வருவது இளமை இளமையே.

அழகு.

நல்லுடலுக்கு அறிகுறி யென்னை? அதன் கண் ஊறும் அழகேயாகும். அழகிலா உடல், நோயுடல் என்பதில் என்ன ஐயம்? அவ்வழகுக் கடவுள் கோயில் கொள்ளும் அகவை எது? இளமை இளமை என்று சொல்லவும் வேண்டுமோ?

இளமை அழகுக்குரியது. இக்கால இளைஞர்கள் முகத்தில் அழகு ஒழுகுகிறதோ? இளைஞர்களல்லவோ நாட்டின் செல்வம்? அச்செல்வம் எந்நிலையிலிருக்கிறது? அதை உன்ன உன்ன உள்ளங் குழைகிறது?

பொதுவாக நமது நாட்டு இளைஞர்களையும் சிறப்பாகப் பள்ளி மாணாக்கர்களையும் நோக்குழ் நாட்டுச் செல்வத்தின் நிலைபுலனாகும்.

விழுந்த கண்ணும், வளைந்த முதுகும், சரிந்த தோளும், உடைந்த மார்பும், தளர்ந்த நடையு முடைய உடலில் அழகுக் கடவுள் எங்ஙனம் கோயில் கொள்ளும்? அழகென்பது யாது? அழகு என்பது நிறத்தில், மயிர் நீவலில், மூக்குக் கண்ணாடியில், கழுத்துச் சுருக்கில், பட்டுடையில், பிற அணியில் அமைந்திருப்பதன்று. மூளை, இதயம், நுரையீரல் மண்ணீரல், குண்டிக்காய், முதலிய பேருறுப்புக்கள் செழிய நிலையில் நின்று ஒழுங்குபெறக் கடனாற்றலால் உறும் நரப்புக் கட்டினின்றுங் குருதி யோட்டத்தினின்றும் முகிழ்க்குந் தசையிடை யரும்புவது அழகாகும்.

மலச்சிக்கல்.

இவ்வழகு அரும்பா தொழிதற்கு மூலகாரணம் மலச்சிக்கலேயாம். வியர்வை முதலிய அழுக்குகளும் வெளிவராது ஆங்காங்கே தேங்கலும் மலச்சிக்கலின் பாற்பட்டதே. மலச்சிக்கலால் பிணியுறுகிறது. பிணியால் பேர் உறுப்புக்களின் இயக்கமும், நரப்புக்கட்டும் இரத்த ஓட்டமுங் குன்றுகின்றன. இக்குலைவால் அழகு உறைதற்கு இடனில்லாமற் போகிறது. ஆகவே மலச்சிக்கல் உறாதவாறு உடலை ஓம்புதல் வேண்டும்.

மலச்சிக்கல் உறுதற்குக் காரணம் என்னை? காரணம் பலபடக் கூறலாம். சுருங்கச்சொல்லுமிடத்து இயற்கையோடியைந்து வாழாமை, மீதூண், பொருந்தா உணவு, தீயொழுக்கம, செயற்கை முறைகட்கு இரையாதல், கடவுளிடத் தன்பின்மை, உயிர்களிடத் தன்பின்மை முதலியவற்றைச சொல்லலாம்.

உடற்பயிற்சி.

நல்லுடற் பேற்றிற்கெனப் பெருமுயற்சி செய்யவேண்டுவதில்லை. வைகறைத் துயிலெழப் பயிலுதல் வேண்டும். எழுந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு, வியர்வை சிந்த ஏதாயினும் உடற்பயிற்சி செய்தல் வேண்டும்.

உடற்பயிற்சிகள் பலதிறத்தன. அவரவர் உடல்நிலைக் கேற்றவண்ணம் அவரவர் ஏதாயினும் ஒன்றைக்கொள்ளலாம். தண்டால் நீச்சு முதலியன சிறப்பாகக் குறிக்கத்தக்கன. எல்லாருங் கொள்ளத்தக்கதும் எளியதுமாயிருப்பதும் ஒன்று, அஃது உலாவுதல். நடையில் உடற்பயிற்சியும் காற்றிடை மூழ்கலும், ஞாயிற்றொளியில் தோய்தலும் நிகழ்ந்துவிடுகின்றன.

நமது நாட்டின் சிலம்பப் பயிற்சியை உங்கட்கு நினைவூட்ட விரும்புகிறேன். பண்டை நாளில் நமது நாட்டில் முனிவர்கள் உள்ளிட்ட பலருஞ் சிலம்பம் பயின்று வந்தனர். இப்பொழுது அதன் நிலை எவ்வாறிருக்கிறது? நகரங்களில் அதன் பெயரே மறைந்துவிட்டது. அது தத்தாரிகளின் ஆட்டத்துக்குரியதென்றுஞ் சிலவிடங்களிற் கருதப்படுகிறது. சிலம்பத்துறை ஒவ்வொன்றும் உடலோம்பலுக்குரியது. அஃதெங்ஙனம் ஒரு சிற்றினத்துக்குமட்டும் உரியதாகும்? அது குறித்து ஈண்டுப் பலபடப் பேசாது நமது நாட்டுச் சிலம்பப் பயிற்சியை உயிர்ப்பிக்கவேண்டுவது இளைஞர் கடமைகளுள் ஒன்று என்று சுருங்கக் கூறுகிறேன்.

உணவு.

உடற்பயிற்சியின் பின்னே நறு நீராடிக் கடவுளை நினைந்துருகி உள்ளத்தை அன்பு மயமாக்கிப் பொருந்திய உணவு கொள்ளல்வேண்டும். உணவு முறைகள் பெரிதுங் கவனிக்கற்பாலன. முதலாவது வேளை நாழியின்றிச் சாப்பிடுவதை நிறுத்தல் வேண்டும். பசித்தோற்றமில்லாதபோது எக்காரணம் பற்றியும் உணவு கொள்ளலாகாது.

மீதூண் கொள்வது அறியாமை. நோய்க்கும் அகால மரணத்துக்கும் அடிகோலுவது மீதூண் மீதூணாகும். முன்னே உண்டது செரிப்பதற்குள் மேலே உண்டு உண்டு சுமை சுமத்திக் கொண்டிருந்தால் ஈரலுக்குச் சவலை ஏற்படும். பின்னே மற்றப் பேருறுப்புகட்குக் கேடு சூழும். அதனால் பிணியும் அகால மரணமும் நேரும்.

பொருந்தா உணவுங்கூடாது. இப்பொழுது நமது நாட்டில் மக்கள் பலர் பொருந்தா உணவு உண்டு பலதிற நோய்வாய்ப்பட்டு அகால மரணத்திற்குட்படுகிறார். நமது தென்னாட்டார்க்கு ஜீவாதார உணவுப் பொருளாயிருப்பது அரிசி. அவ்வரிசி இயந்திரத்தால் நன்கு தீட்டப்படுகிறது. தவிட்டுக் கொழியல் ஜீரணத்துக்கெனக் கடவுளால் அமைக்கப்பட்டது. அது நீங்கிய அரிசிய பொருந்திய உணவாகுமா? கொழியல் நீங்காத கைக்குத்தரிசியைச் சமைத்துண்பது சிறப்பு. கைக்குத்தாலுங் கொழியல் நீங்குதலாகாது என்பது கவனிக்கத்தக்கது. சமையல் மட்பாண்டங்களில் செய்வதே பொருத்தம்.

காய் கீரை முதலியவற்றை நாமேவீட்டுக் கொல்லைகளில் பயிரிட்டுக் கொள்வது நலன். ஞாயிறொளியுள்ள ஒருவித சத்து, காய்

கீரைகளிற் புகுந்து படிகிறது. அச்சத்து நீங்குதற்குள் அவைகளைச் சமைத்துச் சாப்பிடுதல்வேண்டும். இரண்டு நாள் மூன்று நாள் வண்டிகளில் அடிபட்டு வறண்டு சத்திழந்த காய் கீரைகளைச் சாப்பிடுவது வெறும் மரத்துகளைத் தின்பதை யொக்கும். காய் கறிகளில் அளவு கடந்த புளி காரம் பெய்து சமைப்பது கூடாது. நமது தென்னாட்டார்க்குப் புளி காரப்பித்து என்று விடுமோ அறிகிலேன்.

புலால் உணவுப் பித்து மற்றொன்று. புலால் உணவில் உடல் உரம் உண்டு என்று சிலர் கருதுகின்றனர். புலால் உணவில் அமிழ்ந்து கிடந்த மேல்நாட்டு அறிஞர் பலர் இப்பொழுது புலால் உணவின் புன்மை தெரிந்துவருகின்றனர். புலால் உணவு. பொருந்திய உணவின் பாற்பட்டதன்று என்று அன்னார் ஆராய்ச்சி முறையுடன் பல நூல் எழுதியிருக்கின்றனர். நம்முன்னோர்கள் ஜீவகாருண்யத்தை அடிப்படையாகக் கிளத்திப் புலாலுணவை மறுத்துக்கூறினார்கள். மேல்நாட்டு அறிஞர்கள் 'புலால் உணவால் உடல் வளத்துக்கே கேடுண்டு' என்பதை ஆராய்ச்சியால் நிறுவிக்காட்டி அவ்வுணவை மறுக்கின்றனர்கள். ஆதலால் உடல் நலன் விரும்புவோர் புலாலுண்ணாதிருப்பாராக.

கெட்ட எண்ணங்களுடன் உணவு கொள்வோன், உணவுடன் நஞ்சையுங் கலந்து உண்பவனாகின்றான். இக்காரணத்தான், உண்பதன் முன் அன்புக் கடவுளை நினைந்து உணவு கொள்ளும் முறை நம் முன்னோர்களால் கோலப்பட்டது. அன்புக் கடவுளை நினைந்து, அக்கடவுள் கோயில் கொண்டுள்ள உடல் நலங்கருதிப் போற்றுதல் கடவுள் வழிபாட்டில் ஒரு முறையாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. இவ்வன்பு நினைவுடன் உண்பது உடலோம்புவதாகும்.

ஒழுக்கம்.

நல்லொழுக்கம் உடலோம்பலுக்கு இன்றியமையாதது. மீதுண் கொள்ளாது பொருந்திய உணவு கொள்ளும் ஒருவன் ஒழுக்கங்காவா தொழிவனேல் பயன் விளையாது. நல் உணவுடன் நல்லொழுக்கமும் வேண்டற்பாலது. நல்லுணவு நல்லொழுக்கத்தின் பொருட்டே உண்ணப்படுகிறது. ஒழுக்கம் உடல் நலனுக்கு உயிர் போன்றது. 'ஒழுக்கம் விழுப்பந்தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்றார் நாயனார்.

பொறாமை சினம் அவா பிறர் மனைவிழைதல் வரைவின் மகளிர் இன்பந் துய்த்தல் முதலிய தீய ஒழுக்கங்கள் உடல் வளனைக் கெடுத்தல்

இயல்பு. கெட்ட எண்ணங்கள் உடலை எரிக்கும் எழுநா என்று சுருங்கச் சொல்லுகிறேன்.

குடி.

காப்பி டீ கொக்கோ ஓவல்டைன் முதலிய குடிகளையுந் தொலைத்தல் வேண்டும். குளிர் மிகுந்த மேனாட்டறிஞரே அவைகளை இப்பொழுது விலக்கிவருகிறார். வெம்மை நாட்டில் வாழும் நமக்கு அக்குடிகள் எற்றுக்கு? நமது நாட்டில் க்ஷயரோகத்தைப் பெருக்கி வருவன அக்குடிகளேயாகும். அப்பானங்கட்குப் பதிலாக நீர்மோர் இளநீர் முதலியன கொள்ளலாம்.

கள் சாராயம் முதலியவற்றின் கொடுமையை ஈண்டுக் குறிக்க வேண்டுவதில்லை. இப்பொல்லாக் குடிகளால் மக்களின் ஈரல் முதலிய உறுப்புக்கள் அரித்து அரித்து எரிக்கப்படுகின்றன. இவைகளைக் கனவிலும் மறந்துங் கருதலாகாது.

புது நாகரிகத்தால் வேறொரு கொடுமை சிறப்பாக இளைஞர்களிடைக் காட்டுத் தீப்போல் பரவி வருகிறது. அஃதென்னை? சுருட்டு சிகரெட் முதலியன பிடித்தல். சிறு சிறு குழந்தைகள் வாய்களும் புகை யந்திரங்களாக மாறி விடுகின்றன. அவர்கள் நுரையீரலும் இதயமும் அப்புகை வெம்மையால் எரிக்கப்படுவதைத் தொடக்கத்தில் உணர்கிறார்களில்லை. நாளடைவில் இளைஞர்கள் அழகிழந்து என்புக் கூடுகளாகிறார்கள்.

உடலுக்குக் கேடு விளைவிக்கத்தக்க வழக்க ஒழுக்கங்களில் இளைஞர்கட்குப் பற்றும் பிடிவாதமும் உண்டாதல் தவறு. அத்தீப் பயிற்சியுடைய இளைஞர்கள் மெல்ல மெல்ல அதை யொழிப்பார்களாக.

இல்லறம்.

உடலோம்பி உடலை வளஞ்செய்த பின்னை இல்லறத்திலிறங்கல் வேண்டும். இல்லறத்தின் இன்றியமையாமையைப்பற்றி 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை' என்னும் நூலில் 'இயற்கையறம்' என்னும் பகுதியில் என்னால் இயன்றவரை விளக்கியிருக்கிறேன். இல்லறத்திலுள்ள பல நலங்களுள் உடலோம்பலுமொன்று.

இன்னோரன்ன பலதிற வழிகளில் உடலை யோம்பிவரின் நோயற்ற வாழ்வெனுங் குறைவற்ற செல்வம் பெறலாம். மறுமையிலும் இன்பம் நுகரலாம். ஆகவே நோயணுகா அழகுடல் பெற முயலுங்கள்.

வீரம்.

வாழ்விற்கு வீரம் வேண்டற்பாலது என்று பலநாட்டு ஆன்றோர் கூறியுள்ளார். வாழ்விற்கு வீரம்வேண்டற்பாலதே. வீரம் எது? பொறுமையினின்றெழும் மூர்க்க சக்தியே பெரிதும் வீரம் என்று வழங்கப்படுகிறது. அது தவறு.

பொறுமை, அழகுடல் பெற்ற அழகுளத்தில் எழுதல் அரிது. பொறுமை முதலிய தீ நீர்மைகட்கு அடிப்படை நல்லுடலின்மையேயாகும். குருதி நிலைகெட்ட உடலில் வெம்மை செறிதல் இயல்பு. அவ்வெம்மையினின்றும் சினம் அழுக்காறு முதலிய நச்சுக் குழவிகள் பிறந்துகொண்டேயிருக்கும். அவைகள் பிறரைத் துன்புறுத்தவே தூண்டும். அத்துன்புறுத்தல் எங்ஙனம் வீரமாகும்? மெலிந்த உடலில் குருதிவற்றிய காரணத்தால் பொறுமை வெகுளி நிரம்பிய உள்ளத்தினின்றும் பிறப்பது வீரமன்று. அஃது அச்சமாகும். அச்சங் கருவி தாங்கச் செய்கிறது. அச்சம் பின்னாளில் வீரமாகக் கொள்ளப்பட்டது. புறர் வெகுண்டெழுந்து துன்புறுத்தும் போது, அதைப்பொறுத்தலே வீரம். கோழமையால் துன்பம் பொறுத்தல் வீரமாகாது. அன்பால் அதைப் பொறுத்தலே வீரம். வீரம் அன்பினின்றும் பிறத்தல் வேண்டும். இளைஞர்களிடை இப்பொறுமை வீரம் பொலிதல் வேண்டுமென்பது எனது வேணவா. இவ்வீரம் பெற இளைஞர்கள் முயல்வாராக. இதற்கு நல்லுடல் தேவை. ஆதலால் உடலை நல்வழியில் ஓம்புக.

இயற்கை.

மேல் நாட்டார், சிறப்பாக அமெரிக்க நாட்டார், உடலோம்பல் முறையை ஒழுங்குபடுத்தி வருகிறார். இயற்கையோடியைந்த எளிய வாழ்வை அன்னார் அறிவுறுத்தத் தொடங்கியிருக்கிறார். அவர் ஞாயிற்றின் ஒளிக்கணுள்ள சக்திகளை ஆய்ந்து ஆய்ந்து பலஉண்மை காண்கிறார்; காற்று நீர் மண் முதலிய இயற்கைக் கூறுகள் வாழ்விற்கு நல்கி வரூஉம் அருமைகளை யெல்லாங்கண்டு வருகிறார்; மக்களுடன் அழகு என்றும் நிலைத்து உறைதற்குரிய முறைகளைத் தெரிந்து வருகிறார். அழகு வளர்ச்சிக்கெனவும் காப்புக்கெனவும் பல கழகங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. நாம் என் செய்கிறோம்? நமது காலம் எவ்வழியில் செலவாகிறது? இளைஞர்களே! ஓர்மின்! ஓர்மின்! நமது முன்னோர்களாய பழந்தமிழர்கள் அழகின் நுட்பம் தெளிந்து அழகையே கடவுளாகக் கொண்டார்களெனில், அவர்கள் இயற்கையுடல் எவ்வளவு

இயைந்து வாழ்ந்தார்கள் என்பது விளங்கும். அழகைப்பற்றியும் பிற வற்றைப் பற்றியும் 'முருகன் அல்லது அழகு' என்னும் நூலில் விரிவாக எழுதியிருக்கிறேன்.

இளைஞர்களே! உடலோம்பலுக்குரிய அகவை யிதுவே. இவ் வேளையிலேயே உடலோம்பலிற் கருத்தைச்செலுத்துங்கள். உடல் வளம் பெறு வாழ்வு என்ன? நீங்கள் அழகுக் கொழுந்துகளாகப் பொலிதல் வேண்டும். உங்களைப்பார்க்குபோது அழகுக் கடவுள் நினைவுதோன்றுதல் வேண்டும். ஆகவே அழகை எண்ணுங்கள்; அழகை உண்ணுங்கள் அழகாகுங்கள். நாடு முழுவதும் உங்களால் அழகுபெற வேண்டுமென்பது எனது பேராவல்.

மனோவசியத்தின் பொருளும் பயனும்.

(திரு. பி. ஸ்ரீ. அவர்கள் எழுதுவது)

'மனோவசியம்' என்பது 'மனத்தை வசமாக்குவது' என்று பொருள்படும். இதற்கு வேண்டிய சாதனங்களையும் முறைகளையும் அப்பியாசங்களையும் ஒழுங்காக அனுப்ப வழியில் தொகுத்து அமைத்துக்காட்டுவது மனோவசிய வித்தையாகும்.

மனோவசிய வித்தையால் மனத்தை வசமாக்கி மலரச் செய்வதோடு, உடம்பையும் வசமாக்கிப் பேணுதல் கூடும்.

1. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" இப்படிப்பட்ட வாழ்விற்கு, மனோவசிய வித்தை ஓர் அருந்துணையாகும். உண்மையான—மருந்தில்லாத—இயற்கை வைத்தியம் மனோவசியவைத்தியமே. மருந்தால் குணமாகாத நோய்களையும் மனோவசிய வைத்தியமும் சுகமாக்கும் என்பது அறிஞர் அனுபவமே. தீராத நோய்களையும் தீர்த்து வைக்கும் இவ்வித்தை ஓர் அரிய வித்தையே யன்றோ? எனவே நோய்களைப் போக்கி ஆரோக்கியம் அளிப்பது மனோவசிய வித்தையின் முதற் பெரும் பயனாகும்.

2. 'நோய்' செய்வது—அதாவது துன்பம் செய்வதே நோயாகும். உடம்பையும் உள்ளத்தையும் கெடுத்து அவ் இரண்டிற்கும் துன்

பம் தரும் கெட்ட பழக்க வழக்கங்களும் ஒருவகையில் 'நோய்' களாகவே கருதத்தக்கன. இத்தகைய நோய்களையும் மனோவசிய வித்தை நீக்குதல் கூடும். குழந்தைகளுக்கும் வயது முதிர்ந்தவர்களுக்கும் இச்சிகிச்சை செய்து நோய்களை நீக்குவதோடு கெட்ட பழக்க வழக்கங்களையும் போக்குவது எவ்வளவு உபகாரமான காரியமாயிருக்கும்.

3. குழந்தைகளின் நோய்களையும் கெட்ட பழக்கங்களையும் போக்குவதோடு, குழந்தையின் வளர்ப்பிற்கே மனோவசிய சாஸ்திரம் ஒரு நற்றுணையாக அமையும்.

4. குழந்தை வளர்ப்பிற்கு அனுகூலமாவதோடு குழந்தைகளின் கல்விப் பயிற்சிக்கும் இவ்வித்தை இன்றியமையாதது. சிறுவருக்கு ஒழுக்கத்தோடு கல்வியையும் ஞாபகசக்தியையும் ஊட்டுவதற்கு விரும்பும் உபாத்தியாயர் மனோவசிய வித்தையை நன்கு அறிந்துகொள்ளுதல் வேண்டும். இதனால் பிள்ளைகளுக்குக் கல்வியிலும் ஒழுக்கத்திலும் ஆசை பிறப்பதோடு உபாத்தியாயரிடத்திலும் உண்மையான பக்தியும் பெரு மதிப்பும் ஏற்படும்.

5. மனோவசிய சாஸ்திரி, உபாத்தியாயர் தொழிலைக் கைக்கொண்டாலும் கொள்ளாவிட்டாலும் ஜனசமூகத்திற்கு ஓர் இயற்கை வைத்தியனாக அமைவதோடு, ஒரு நல்லாசிரியனாகவும் விளங்குதல் கூடும். அனைவரும் மனோவசிய சாஸ்திரியிடம் அன்பு பூண்டு வாழ்வர்.

6. மனோவசிய சாஸ்திரி ஜனசமூக நண்பனாகவும் பிராணிகளின் தோழனாகவும் இயற்கையின் காதலனாகவும் வாழ்கிறான்.

7. மனித உள்ளத்தில் மறைந்துகிடக்கும் ஆன்ம மனோசக்திகளை அறிந்து இவ்வுலகிலேயே பேரின்ப வாழ்வதற்கும், வாழ்க்கைப் போரில் வெற்றி சூடி, எடுத்த காரியத்தை இனிது முடிக்கும் ஆற்றல் பெறுவதற்கும், மனோவசிய வித்தை இன்றியமையாதது.

8. நட்புக்காவலையும் அன்புக் காதலையும் தூண்டி வளர்த்து, வாழ்க்கைக்கு ஓர் இன்ப சமுத்திரமாகச் செய்வது மனோவசிய வித்தையே.

9. தன் மனத்தை வசிகரித்து இன்ப வாழ்வு வாழ்வதோடு பிறர் மனம் அறிந்து அம்மனத்தையும் வசியஞ்செய்து வாழ்க்கையில் ஜெயக் கொடி நாட்டும் மர்மத்தை வெளியிடுவது மனோவசிய மர்மமே.

10; பேரின்ப வாழ்க்கையோடு வீரவாழ்க்கையும் ஞான வாழ்க்கையும் மனோவசிய சாஸ்திரிக்கு எளிதில் கைகூடும் என்பது திண்ணம்

(தொடரும்)

கடவுள் வணக்கம்.

தனத்தந்தந் தனத்தந்தந்
தனத்தந்தந் தனத்தந்தந்
தனத்தந்தந் தனத்தந்தந் தனதான.

கரிக்கொம்பந் தனித்தங்கங்
குடத்தின்பந் தனத்தின்கண்
கறுப்புந்தன் சிவப்புஞ்செம் பொறிதோள்சேர்

கணைக்கும்பண் டுழைக்கும்பங்
களிக்கும்பண் பொழிக்குங்கண்
கழுத்துஞ்சங் கொளிக்கும்பொன் குழையாடச்

சரக்குஞ்சம் புடைக்கும்பொன்
துகிற்றந்தந் தரிக்குந்தன்
சடத்தும்பண் பிலுக்குஞ்சம் பளமாதர்

சலித்தும்பின் சிரித்துங்கொண்
டழைத்துங்கண் பசப்பும்பெண்
தனத்துன்பந் தவிப்புண்டிங் குழல்வேனே

சுரர்ச்சங்கந் துதித்தங்கஞ்
செழித்தின்பங் களித்துண்பன்
சுகத்துய்ந்தின் பலர்ச்சிந்தங் கசுராரைத்

துவைத்தும்பந் தடித்துஞ்சங்
கொலித்துங்குன் றிடித்தும்பண்
சுகித்துங்க்ண் களிப்புங்கொண் டிடும்வேலா

சிரப்பண்புங் கரப்பண்புங்
கடப்பந்தொங் கலிற்பண்புஞ்
சிவப்பண்புந் தவப்பண்புந் தருவோனே

திணைத்தொந்தங் குறப்பெண்பண்
சசிப்பெண்கொங் கையிற்றுஞ்சுஞ்
செழிக்குஞ்செந் திலிற்றங்கும் பெருமாளே.

தனத்தந்தத் தனத்தந்தத்
தனத்தந்தத் தனத்தந்தத்
தனத்தந்தத் தனத்தந்தத்—தனதான.

பருத்தந்தத் தினைத்தந்திட்
டிருக்குங்கச் சடர்த்துந்திப்
பருக்கும்பொற் ப்ரபைக்குன்றத் தனமானார்

பரிக்குந்துச் சரக்கொன்றத்
தினைத்தங்குற் பலப்பண்டைப்
பாக்குஞ்சக் கரத்தின்சத் தியைநேரும்

துரைச்செங்கட் கடைக்கொன்றிப்
பெருத்தன்பற் றினைத்தங்குத்
துணிக்கும்புத் தியைச்சங்கித் தறியேனே

துணைச்செம்பொற் பதத்தின்புற்
றெனக்கென்றப் பொருட்டங்கத்
தொடுக்குஞ்சொற் றமிழ்த்தந்திப் படியாள்வாய்

தருத்தங்கப் பொலத்தண்டத்
தினைக்கொண்டச் சுரக்கஞ்சத்
தடத்துன்பத் தினைத்தந்திட் டெதிர்சூரன்
சமர்க்கஞ்சிப் படித்துஞ்சக்
கதிர்த்துங்கத் தயிற்கொண்டத்
தலத்தும்பர்ப் பதிக்கன்புற் றருள்வோனே

திருக்கஞ்சத் தனைக்கண்டித்
துறக் கங்குட் டிவிட்டுஞ்சற்
சிவற்கன்றப் பொருட்கொஞ்சிப் பகர்வோனே

செயத்துங்கக் கொடைத்துங்கத்
திருத்தங்கித் தரிக்கும்பொற்
றிருச்செந்திற் பதிக்கந்தப் பெருமாளே.

ஸ்தல மஞ்சரி.

ஸ்ரீமதி. பண்டிதை அசலாம்பிகை அம்மா ளவர்கள்.

(146-வது பக்கத்தொடர்ச்சி.)

காளுடு காத்தான்.

கமலைக் குவளைகநேர் காளுடு காத்தான்
விமலத் திருக்கோயில் மேவும்—அமலவெழிற்
கொப்பிலுமையோ டொளிருஞ் சிவலோக
அப்பன் கழலே யரண். 51

திருக்கோவல் வீரட்டம்.

சீரிட்ட பெண்ணை நதிமேற் றிகழ்திருக் கோவலினில்
போரிட்ட வந்தக ஊைப்போர் தொலைத்துப் பொலிந்தருளெம்
வீரட்ட நாதன் கழற்ரு மரைகளில் வீழ்ந்திறைஞ்சக்
காரிட்டவாணவப் பொய்க்கங்குல் தேய்ந்து கழிந்ததுவே. 52

தேகளீசாப் பெருமான்.

மூவுலகு மீரடியால் முன்பளந்த சேவடியாய்
பூவிலகுங் கோதை புணர்புயலே—மூவர்
மொழிவிளக்கி ஞலறியு மொய்ம்பா வெனைநீ
விழிவிளக்கி யாள்வாய் விரைந்து. 52

திருவெண்ணை நல்லூர்.

பித்தா வெனவழைக்கப் பெற்றுள்ளம் பூரிக்கும்
அத்தா வரசே வருட்டுறைசேர்—முத்தே
திருவெண்ணை நல்லூர்ச் சிவமே யினியென்
கருவண்ணா நீத்தருளிக் கா. 53

நாகை நீலாயதாக்ஷி.

நீண்டகருங் கண்ணியென நீணிலத்தோ ருன்கழலே
பூண்டனர்க ளென்னலகில் பொல்லாங்கால்—காண்டிறமே
இத்தனைநாள் கூடாம லேங்கினேன் புண்ணியந்தான்
ஒத்தமைய கில்லா துடன். 54

மாலாய தாட்சியெலா மாய்க்கொழிய நாகையில்வாழ்
நீலாய தாட்சிபத நேர்ந்திட்டேன்—பாலாய
வுள்ளந் திரியாம லோதரிய போதசுக
வெள்ளங் கொழிக்க விரைந்து 55

சீர்காழி.

பூந்தராய் வாழும் பொருளேயிம் மண்ணுலகில்
மாந்தராய் வந்துன் மலரடியைத்—தாந்தொழாப்
பேதையர்க ளந்தோ பிறவிக் கடல்நீந்தற்
கேது துணை யேது புணையே. 56

ஞானசம்பந்தர்.

வெம்பந்த நீக்கி விருந்தாக நற்கதியைத்
தம்பந்த மானோர் தமக்களிக்குஞ்—சம்பந்தா
நின்னைத் தருந்தவமார் நீள்பதியான் கண்டிறைஞ்ச
முன்னைத் தவமென் மொழி. 57

திருநிலை நாயகி.

பிள்ளையழ வுள்ளுருகிப் பேசரிய மெஞ்ஞானங்
கொள்ளுமுலைப் பாலிற் குழைத்தூட்டும்—வள்ளற்றாய்
நீயோ சுமந்தகட்டில் நேர்ந்தவனை யீன்றிட்ட
தாயோ தவஞ்செய் தவர். 58

நடுநாடு ரிஷிவந்தியம்.

மேனியுமைக் கோலம் மிளிர்ந்திடவே யிவ்விலிங்கத்
தேனின பிடேகந் தெரிசித்தேன்—மேனிமிரும்
புந்திமய லத்தனையும் போக்கினே னல்விருடி
வந்தனப் பேர்ச் செம்பதியில் வந்து. 59

(தொடரும்.)